# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,875 — 1969 ඔක්තෝබර් 9 වැනි බ්‍රහස්පතින්දා — 1969.10.9

14,875 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 1083 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


## பதவிகள்—வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலத்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமைபற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். " இலங்கையர் " என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஆசிரியர் கலாசாலை விடுதிச்சாலை (ஆண்) மேற்பார்வையாளர் பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள ஆசிரியர் கலாசாலையிலுள்ள விடுதிச்சாலை மேற்பார்வையாளர் பதவிகளுக்கு, கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்ட ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் " நிரந்தரச் செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்தில் 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(i) இப்பதவிகள், நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரிதுடையனவையுமாகும். விதவைகள், அனுதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) நியமதாரிகள், அரசகரும மொழி நோக்கங்களின் பொருட்டு புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களாயின், தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும் ;

(iii) அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் எற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் நியமிகப்படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார் ;

(iv) நியமதாரிகள் தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும்;

(v) ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

3. சம்பளமும் சகாயப்படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறுகும் :—ரூ. 1,980—11 × 120—3,300/- வருடாந்தம்.

சீவன சகாயப்படி, வாடகைப் படி, விசேட சீவன சகாயப்படி ஆகியவை அரசாங்க வீதங்களுக்கமையக் கொடுபடும்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். (எற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி எண்கணிதம்/கணிதம், சிங்கள/தமிழ் மொழி, சுகாதாரமும் உடற்றொழிலியலும் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் அல்லது மேற்குறித்த பாடங்கள் உட்பட சி. பா. த. பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும் ;

(இ) விடுதிச்சாலைகளை முகாமை செய்வதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—முதலுதவியிலும் பிணியாளர்களை பராமரிப்பதிலும் அறிவும் அனுபவமும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அபேட்சகர்கள், வேண்டப்படும் நேரம் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரம் ;

(ஆ) பெற்றுள்ள உயர்தொழில் தராதரப் பத்திரங்கள் ;

(இ) விடுதிச்சாலேகளே முகாமை செய்தல், சம்பந்தமான சான்றிதழ்கள்.

குறிப்பு.—(1) சாதனங்களேனும் சாதனங்களின் பிரதிகளேனும் விண்ணப்பங்களுடன் இணைக்கப்படலாகா ;

(2) வேண்டப்படும் நேரத்தில் குறித்த சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களுள் விண்ணப்பித்தற்கு உரித்துடையவர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதி/நிலேயத் தலேவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். எனினும், அவர்கள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு விண்ணப்பத்தின் பிரதி ஒன்றை நேரே அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும் தாமதத்துக்குப் போதிய காரணங்கள் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பகுதித் தலேவர் சிபார்சு செய்தால் அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அது பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலே விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி உடனே கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டுக்கமைய ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பவராவர்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

தொடர்பிலக்கம் : பொ. நி/30/227,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 30 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

$8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ தாளில் இவ்விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

## ஆசிரியர் கலாசாலே விடுதிச்சாலே மேற்கார்வையாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தெளிவாக) : ————.

2. நிரந்தர விலாசம் : ————.

3. சொந்த இடம் : ————.

4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது : ————. பிறந்த திகதி : ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ? : ————.

7. கல்வித் தகைமைகள் : ————.
   (i) பொது : ————.
   (ii) விடுதிச்சாலேகளே முகாமை செய்தல் பற்றிய சான்றிழ்:தகளின் விபரங்கள் : ————.
   (iii) **சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை : ————.**

8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (இ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலேயம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) : ————.

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? : ————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் : ————.

11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு ————.

12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின் :—
   (அ) படைக்கூற்றின் பெயர் : ————.
   (ஆ) வகித்த பதவி : ————.
   (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.

13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களேயும் கொடுக்கவும் : ————.

14. பாடசாலேயில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம்—
   (i) வகித்த பதவி : ————.
   (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் : ————.
   (iii) விலகியதற்கான காரணம் : ————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களேயும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலே நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் : ————.

16. தற்போதைய உத்தியோகம் : ————. நிலேயம் : ————.
   (i) பதவிப் பெயரும் தரமும் : ————.
   (ii) நியமனத் திகதி : ————.
   (iii) இளேப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா ? : ————.
   (iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் : ————.
   (v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி : ————.

17. வேறு யாதேனும் விபரங்கள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

(பகுதி/நிலேயத் தலேவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் : ————.
உங்கள் எண் : ————.

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியின்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

............ இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/* பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

————,
பகுதி/நிலேயத் தலேவரின் கையொப்பம்,
பதவிப் பெயர் : ————.

திகதி : ————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

**10–504—9.10.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,875**

## இலங்கை அரச விமானப்படை

### மருத்துவ அம்மாள் பதவி

இலங்கை அரச விமானப் படைக்கு பயிற்சிபெற்ற மருத்துவ அம்மாள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ந் திகதியன்று அல்லது அதற்குப் முன்னர் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**சம்பளம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் வருடம் ரூபா 5,448 ல் ஆரம்ப மாகி வருடம் ரூபா 144 ஐக் கொண்ட உயர்வுகளால் ரூபா 5,880 வரை உயர்வடையும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குக் கிடைக்கும் நயங்கள் :—

(i) வருடத்திற்கு ரூபா 60 சலவைச் சகாயப்படி,

(ii) வருடத்திற்கு ரூபா 30 சப்பாத்துச் சகாயப்படியுடன்,

(iii) சௌக்கியப் பகுதித் தாதிமார்களுக்குக் கொடுக்கப்படும் உடைகளுக்குச் சமமான இலவச உடைகள் கொடுக்கப்படும்.

2. **வயதெல்லை.**—1969 ஒற்றோபர் மாதம் 26 ந் திகதியன்று 30 வயதிற்குக் குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை நிபந்தனை கிடையாது).

3. **கல்வித் தகைமைகள்.**—(i) ஓர் அங்கீகரிக்கப்பட்ட தாதிப் பாடசாலையில் தாதிப் பயிற்சி பட்டம் பெற்றவர் என்ற திருப்திகரமான சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(ii) வைத்திய சங்கத்தில் தாதியாகப் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) மருத்துவ சட்டத்தின் 105 அத்தியாயத்தின் VII ம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவச்சியாக இருத்தல் வேண்டும்.

(iv) பயிற்சிபெற்ற தாதியாகக் கடமையாற்றி 5 வருட கால அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். சிகிச்சை மண்டப, ஆசுப்பத்திரி தாதி பரிபாலன அனுபவங்களுக்கு முதன்மை அளிக்கப்படும்.

(v) சிறந்த நல்லொழுக்கமும், தேகாரோக்கியமுமுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **நியமன விதிகள்.**—இப்பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளம் உரித்துடையதுமாகும். உபகாரச் சம்பளத் தகுதி 29.4.57 ன் 372 ம் இலக்க திறைசேரி சுற்றறிக்கைக்கு அமையப்பட்டுள்ளது.

5. விண்ணப்பக்காரர் தனது விண்ணப்பப் பத்திரத்துடன் கீழ்க் குறிப்பிடப்படும் பத்திரங்களின் பிரதியை மாத்திரம் இணைத்து அனுப்ப வேண்டும் (மூலம் அல்ல).

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானத்திற்கு அல்லது கல்விக் கட்டளையிற் கொடுக்கப்பட்ட பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) அண்மையில் பெற்றுள்ள மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையினுள்ளவர்களுக்கு இது அவசியமில்லை).

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழும், தொழிற்றுறைச் சான்றிதழும்.

**குறிப்பு.**—விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட பத்திரங்கள் எவையும், திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும் இலங்கை அரச விமானப் படைத் தலைமைக் காரியாலயம், 594 ஆவது தபாற் பெட்டி, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். தவிர நேர்முகமாக இப் பகுதியில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களிடம் கொடுக்கக் கூடாது.

7. ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் அப்பகுதி உயர்தர அதிகாரிகளினூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

8. இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளை வர்த்தமானி தொடக்கத்தின் பகுதி (I) தொகுதி (II) ஐக் கவனிக்கவும்.

9. மேற்கூறப்பட்ட தகைமைகள் இல்லாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

ஏ. சி. அரசரத்தினம்,
சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும்,
இலங்கை அரச விமானப் படைத் தளபதிக்காக.

தலைமைக் காரியாலயம்,
இலங்கை அரச விமானப் படை,
த. பெ. இல. 594,
கொழும்பு,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 30 ந உ.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் : ————.

2. அஞ்சல் முகவரி : ————.

3. பிறந்த தேதியும் வயதும் : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று இணைக்கப்பட வேண்டும்)

4. தேசிய இனம் : ————.
(வம்சாவழியாகவா, பதிவு காரணமாகவா என்பதைத் தெரிவிக்கவும்)

5. விவாகமானவரா அல்லவா : ————.
விவாகமானவரானல்—
(அ) கன்னிப் பெயர் : ————.
(ஆ) கணவன் இருக்கின்றாரா : ————.
(இ) (1) கணவனுடன் சீவிக்கின்றீரா : ————.
(2) சட்டப்படி பிரிந்து வாழ்தல் : ————.
(3) மற்றும்படி : ————.
(4) கணவனின் தொழில் : ————.
(5) அவர் தொழில் புரியும் இடம் : ————.
(6) குழந்தைகளின் எண்ணிக்கை : ————.
(அ) மூத்த குழந்தையின் வயது : ————.
(ஆ) இளைய குழந்தையின் வயது : ————.

6. ஏற்கெனவே தொழில் புரிவதானல் கூறுக —
(அ) தற்போதைய இடம் : ————.
(ஆ) தொழில், புரியும் காலம் : ————.

7. படித்த பாடசாலையும், சித்தியெய்திய பரீட்சைகளும் : ————

8. பயிற்சியின் தகைமை பற்றிய விபரங்களும் தேதிகளும் : ————.

9. மருத்துவச்சியாக பயிற்றப்பட்டவரா : ————.
(தராதரப் பத்திர பிரதி இணைக்கவும்)

10. நற்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் விலாசமும் :————.
(அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றுப் பிரதிகள் இணைக்கவும்)

11. தகப்பனர் அல்லது பாதுகாவலர் பெயரும் விலாசமும் : ————.

12. தராதரங்கள்—

| | | |
|---|---|---|
| சிங்களம் : | பேசுதல் : ———— <br> வாசித்தல் : ————. | எழுதுதல் : ————. |
| தமிழ் : | பேசுதல் : ————. <br> வாசித்தல் : ————. | எழுதுதல் : ————. |
| ஆங்கிலம் : | பேசுதல் : ————. <br> வாசித்தல் : ————. | எழுதுதல் : ————. |

13. இதற்கு முந்திய ஏதாவது அரசாங்க சேவைகளும் விபரங்களும் : ————.

14. தாதி சேவை புரிவதற்கான பதிவிலக்கம் : ————.
(தராதரப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்)

அரசாங்க சேவையிலிருந்து அல்லது பிற ஸ்தாபனங்களிலிருந்து வேலைத் திறமையின்மைக்காக ஒய்வழிக்கவில்லையெனவும், வேலைநீக்கம் செய்யப்படவில்லையெனவும், குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் தண்டிக்கப்படவில்லையெனவும் இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் உடனடியாக அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

————
விண்ணப்பதாரரின் கையொப்பம்,

10-375—9.10.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,875.

## இலங்கைச் சுற்றுப்பயணச் சபை

### உதவி அதிபர் பதவி—சுற்றுப்பயணக் கல்லூரி

இலங்கைச் சுற்றுப் பயணச் சபையின் சுற்றுப் பயணக் கல்லூரி உதவி அதிபர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான தகமைகள்:—**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான்—

(அ) 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவர் எனவும் 40 வயதிற்கு மேற்படாதவர் எனவும்,

(ஆ) அனுமதிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் பட்டதாரி எனவும்,

(இ) ஒரு பல்கலைக் கழகத்தினதோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியினதோ விரிவுரையாளராக இருந்த அனுபவம் கொண்டவராகவோ அல்லது ஒரு கல்லூரியில் சிரேட்ட ஆசிரியராக 6 வருஷ காலம் இருந்தவரெனவும் தகுந்த சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கல்லூரி நிர்வாக அனுபவமும் ஆங்கிலம், பொருளாதாரம் ஆகிய பாடங்களில் விரிவுரையாற்றும் திறன் உள்ளவர்கட்கு விஷேச சலுகை அளிக்கப்படும்.

**சம்பளத் திட்டம்.**—ரூபா 600—10 × 40—4 × 50 எல்லாம் உட்பட மாதம் ரூபா 1,200.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் தகமைகள், அனுபவம் ஆகியவற்றிற்கு இணங்கப் பொருத்தமாக சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

**தொழிலின் நிபந்தனைகள்:—**

(1) தெரிவு செய்யப்பட்டவர் ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதவராயின்,—

(அ) இரண்டு வருஷம் தகமை காண் கால சேவை செய்யுமாறும்,

(ஆ) தகுந்த தேக நலம் உடையவரா என்பதை நிரூபிக்கும் பொருட்டு ஒரு வைத்தியப் பரீட்சைக்குச் சமூகம் அளிக்குமாறும் வேண்டப்படுவர்.

(2) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்:—

(அ) இதற்கு முதல் இயற்றப்பட்ட அல்லது இயற்றப்படவுள்ள சபையின் சட்டம் நியதிகட்கு இணங்கி நடக்குமாறும்,

(ஆ) குறிப்பிடப்பட்ட காலத்தில் சபையால் குறிப்பிடப்பட்ட வகுப்பில் சிங்கள தகமையை அடையவேண்டுமெனவும்,

(இ) ஊழியர் சேமநிதி அல்லது சபையின் சேமநிதி ஏற்படுத்தப்படின் அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய நிதியில் பங்கு கொள்ள வேண்டுமெனவும்,

(ஈ) சபையால் நிர்ணயிக்கப்படும் பிணை கொடுத்தல் வேண்டுமெனவும் வேண்டப்படுவர்.

அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களினது அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களினது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவருக்கூடாக அல்லது கூட்டுத்தாபனத் தலைவருக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்களுடன் மூல சான்றிதழ்கள் அனுப்பக்கூடாது.**

**முறையற்ற ரீதியில் ஆதரவு தேடுதல் தகமைக் குறைவாகக் கணிக்கப்படும்.**

எல்லா விண்ணப்பங்களும் தலைவர், இலங்கை சுற்றுப் பயணச் சபை, தபாற் பெட்டி எண் 1504, கொழும்பு 3 என்ற விலாசத்திற்கு 30.10.1969 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் சேரக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் " உதவி அதிபர் பதவி " என்ற சொற்கள் எழுதப்பட வேண்டும்.

தலைவர்,
இலங்கைச் சுற்றுப்பயணச் சபை.

த. பெ. எண் 1504,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மீ 1 ந் உ.

10–405—9.10.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,875

---

## இலங்கை சுற்றுப்பயணச் சபை

### பதவி வெற்றிடங்கள்

இலங்கை சுற்றுப்பயணச் சபையில் கீழ்க்காணும் பதவிகளுக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி அதிபர்கள்.
நிர்வாக உதவியாளர்கள்/தகவல் உதவியாளர்கள்.
சுருக்கெழுத்தாளர்.

**(i) உதவி அதிபர்கள்**

**சம்பளத் திட்டம்.**—மாதம் ஒன்றிற்கு எல்லாம் உட்பட ரூபா 600—10 × 40—4 × 50—ரூபா 1,200.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர் தகைமைகள் அனுபவங்கள் ஆகியவற்றிற்கு இணங்க பொருத்தமான சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

**தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான்—

(அ) 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியன்று 25 வயதுக்கு குறையாதவர் எனவும் 40 வயதுக்கு மேற்படாதவர் எனவும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பின்வரும் பாடங்கள் ஒன்றில் விசேட பட்டம் பெற்ற பட்டதாரி எனவும் அல்லது அவற்றிற்கு சமமான தகைமைகள் உள்ளவர் எனவும் தகுந்த சான்று சமர்ப்பிக்கவேண்டும்.

பொருளாதாரம், வர்த்தகம், புள்ளிவிபரம், கணிதம், சமூகவியல்.

மேலதிகத் தகைமைகள்

(அ) திட்ட மதிப்பிடுதலிலும், நிகழ்ச்சி நிரல் படுத்தலிலும் பயிற்சியும் அனுபவமும்.

(ஆ) ஜேர்மன், பிரான்சு, இத்தாலி, ஸ்பானிஸ், ரஷ்யன் ஆகிய பிறதேச மொழிகளில் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் கருமம் ஆற்றத்தகுந்த அறிவு.

கீழ்க்காணப்படுவர்கட்கு மேற்குறிக்கப்பட்ட தகைமைகள் சார்பாக சலுகை வழங்கப்படும்.

(அ) விசேட மேலதிகத் தகைமைகள் உடைய விண்ணப்பத்தாரர்.

(ஆ) அரசாங்க அல்லது தனியார் துறையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்கு சேவை செய்தவர்கள்.

(இ) சபையில் தற்பொழுது நிர்வாக உதவியாளர்களாகவே அல்லது தகவல் உதவியாளர்களாகவோ சேவை செய்பவர்கள் அல்லது இத்தர பதவியில் உள்ள சபையின் ஊழியர்கள்.

**(ii) நிர்வாக உதவியாளர்கள்/தகவல் உதவியாளர்கள்**

சம்பளத்திட்டம்.—மாதம் ஒன்றிற்கு எல்லாம் உட்பட ரூபா 350—25—ரூபா 800.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர் தகைமைகள் அனுபவம் ஆகியவற்றிற்கு இணங்க பொருத்தமான சம்பளத்திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

**தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் தான்—

(அ) 1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் தேதியன்று 22 க்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர் எனவும்.

(ஆ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர் எனவும் அல்லது அதற்கு சமமான தகைமை யுள்ளவர் எனவும்.

தகுந்த சான்று சமர்ப்பிக்கப்வேண்டும்.

(அ) இலங்கையின் சரித்திரம், பண்பாடு, பொருளாதாரம் ஆகியன சம்பந்த அறிவு.

(ஆ) சிறந்த ஆங்கில அறிவு.

(இ) பிரான்சு, ஜேர்மன், இத்தாலி, ஸ்பானிஷ், அல்லது ரஷ்யன் ஆகிய பிறதேச மொழிகளில் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் கருமம் ஆற்றத் தகுந்த அறிவு.

கீழ்க்காணப்படுபவர்கட்கு மேற்குறிக்கப்பட்ட தகைமைகள் சார்பாக சலுகை வழங்கப்படலாம்.

(அ) பயண வர்த்தகத்துறையில் பொறுப்பு வாய்ந்த பதவியில் ஆகக் குறைந்தது 2 வருடங்களுக்கு சேவை செய்தவர்கள்.

(ஆ) இலங்கைச் சுற்றுப் பயணச் சபையின் ஊழியர்கள்.

**(iii) சுருக்கெழுத்தாளர்—தரம் II—ஆங்கிலம்**

**சம்பளத்திட்டம்.**—மாதம் ஒன்றிற்கு எல்லாம் உட்பட ரூபா 230—4 × 10—14 × 15—ரூபா 480.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர் தகைமைகள் அனுபவம் ஆகியவற்றிற்கு இணங்க பொருத்தமான சம்பளத்திட்டத்தில் அமர்த்தப்படலாம்.

**தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பத்தாரரும் தான்—

(அ) 1969 ம் ஆண்டு அக்டோபர் 1 ம் தேதி 35 வயதுக்குட்பட்டவரெனவும்.

(ஆ) இரு தடவைக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 4 க் குறையாத சிறப்பு சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவரெனவும்.

(இ) சுருக்கெழுத்தில் ஒரு நிமிடத்திற்கு குறைந்தது 80 சொற்கள் எழுதும் வேகமும், தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 30 சொற்கள் தட்டும் வேகமும் கொண்டவரெனவும் தகுந்த சான்று சமர்ப்பிக்கபடவேண்டும்.

**சிங்கள தட்டெழுத்து, சுருக்கெழுத்தில் தேர்ச்சி உள்ள விண்ணப்பத்தாரர்கள் விரும்பப்படுவர்.**

2. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான தொழில் நிபந்தனைகள்

(1) தெரிவு செய்யப்பட்டவர் ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாதவராயின்,

(அ) 3 வருடங்கள் தகைமை காண் கால சேவை செய்யுமாறும்.

(ஆ) தகுந்த தேக நலம் உடையவரா என்பதை நிரூபிக்கும் பொருட்டு ஒரு வைத்தியர் பரிட்சைக்கு சமூகம் அளிக்குமாறும்.

(2) கடல் கடந்த நாட்டு சேவைக்கு நியமிக்கப்படவிருப்பின் தெரிவு செய்யப்பட்டவர் பிறதேசங்களில் சேவை செய்வதற்கு தகுந்த உடல் நலம் உடையவர் என வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்குமாறும் வேண்டப்படுவர்.

(3) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர்.

(அ) இதற்கு முதல் இயற்றப்பட்ட அல்லது இயற்றப்படவுள்ள சபையின் சட்டம் நியதிகட்கு இணங்கி நடக்குமாறும்.

(ஆ) குறிப்பிட்ட காலத்தில் சபையால் குறிப்பிடப்பட்ட வகுப்பில் சிங்கள தகைமை அடைய வேண்டுமெனவும்.

(இ) ஊழியர் சேம நிதி அல்லது சபையின் சேமநிதி ஏற்படுத்தப்படின் அச்சந்தர்ப்பத்தில் அத்தகைய நிதியில் பங்கு கொள்ள வேண்டுமெனவும்.

(ஈ) சபையால் நிர்ணயிக்கப்படும் பிணை கொடுத்தல் வேண்டுமெனவும் வேண்டப்படுவர்.

3. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களினது அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களினது விண்ணப்பங்கள் திணைக்களத்தலைவருக் கூடாக அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்க்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

4. விண்ணப்பங்களுடன் மூல சான்றிதழ்கள் அனுப்பக்கூடாது.

5. எல்லா விண்ணப்பங்களும் தலைவர், இலங்கை சுற்றுப் பயணச் சபை த. பெ. எண். 1504 ,கொழும்பு என்ற முகவரிக்கு 26.10.1969 திகதி அல்லது அதற்கு முன் சேரக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

6. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபுற மேற்பக்கத்தில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படவேண்டும்.

7. முறையற்ற ரீதியில் ஆதரவு தேடுதல் தகைமைக்குறைவாக கணிக்கப்படும்.

தலைவர்,
இலங்கை சுற்றுப்பயணச் சபை.

1969 ம் ஆண்டு அக்டோபர் மீ 2 ந வ.

10–511—9.10.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,875.

---

இல. A.74/×2154/69

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பிரதம வித்தியாதிகாரி (மனையியல்) பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள பிரதம வித்தியாதிகாரி (மனையியல்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.10.24 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.10.31.

குறிப்புகள்.— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும், முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம் ;

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் : இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரிகள் விதவைகள் அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்கு கட்டணம் செலுத்த வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அவர் சேமலாப நிதி நலன்களுக்கு உரித்துடையராவார் ; இதன்பொருட்டு தனது சம்பளத்தில் 5% தை அவர் அரசினர் சேவை சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட மொத்த சேவையைப் பூர்த்தி செய்யமுன் தொடர்ந்து சேமலாப நிதிக்கு கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நிதி நலனுடைய ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் அவர் ஏற்கனவே 10 வருட சேவையை பூர்த்தி செய்திருப்பின் நியமனத் திகதியிலிருந்து 6 மாத காலத்துக்குள் அவர் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) நியமதாரி, முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை ஏற்கனவே வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு வருட காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகரை நியமனத்தில் உறுதிப்படுத்தல் ஏனைய விடயங்களுடன் அரசினர் சேவை ஆணைக்குழு விதிகள், நிர்வாக விதிகள் கல்விச் சட்டம், நிதி விதிகள் ஆகியவற்றில் வினாத்தாள்களைக் கொண்ட ஒரு பரீட்சையில் சித்தியடைதலைப் பொறுத்ததாகும். தகுதிகாண்/பரீட்சார்த்த/பதில் கடமை புரியும் காலத்தில் இப்பரீட்சையில் சித்தி எய்தாவிடின் 120 ஆம், 121 ஆம் இலக்க நிருவாக விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனத் திகதியிலிருந்து 4 வருட காலத்துக்குள் பொது எழுதுவினைஞர் சேவை நிறைவேற்று வகுப்பு இரண்டாம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தேசிய மொழிகளிலான—சிங்களத்தில்/தமிழில்—ஒரு பரீட்சையில் சித்தியடைய வேண்டும். அங்ஙனம் சித்தியடையத் தவறுமிடத்து சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்படும். இப்பரீட்சையில் சித்தி செய்தற்கு அனுமதிக்கப்பட்டுள்ள காலத்துக்கு மேலதிகமாக எடுக்கப்படும் காலம் சம்பள உயர்ச்சிப் பணம் பிற்போடப்பட்ட காலமாகக் கருதப்படும்.

(v) தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் நியமனம் உறுதிப்படுத்தப்படமுன் தகுதிகாண்-பரீட்சார்த்த காலத்தில் மகா வித்தியாதிபதிக்குத் திருப்தியளிக்கும் முறையில் பின்வருவன பூர்த்தி செய்யப்பட வேண்டும் :

(அ) மகா வித்தியாதிபதியால் அங்கீகரிக்கப்படுதற்கமையத் தெரிவு செய்யப்படும் துறையில் ஆரம்ப அல்லது உயர்தர மட்டத்தில் கல்வி நிருவாகத்தல் கல்வி அமைப்பில் ஏற்பட்டுள்ள சமீபகால அபிவிருத்திகள் பற்றி நுணுக்கமாய்ப் படித்தல் ;

(ஆ) மேற்போந்த (அ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிப்பால், பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவத்தை இலங்கைக்கேற்ப எங்ஙனம் பிரயோகிக்கலாமென்பது பற்றிய ஒரு விபரமான கூற்றைச் சமர்ப்பித்தல்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—புதிய முறைப்படி நியமிக்கப்படுபவர்களுக்கு—ரூ. 8,400—10 × 480—11,280 வருடாந்தம். ரூ. 11,280 இல் இரு வருடங்கள் தங்கியபின் ரூ. 13,200 வரை சம்பளம் உயர்ந்து செல்லும். ரூ. 11,760 தைப் பெறமுன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

புதிய முறைப்படி அல்லாது நியமிக்கப்படுபவர்களுக்கு—
£ 600 — 10 × £ 30 — £ 900.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஆ) 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டதாரியாகவும் கற்பிப்பதில் 5 வருட அனுபவம் பெற்றவராகவும் இருப்பதுடன் பாடசாலைகளில் மனையியல் திட்டங்களை ஒழுங்கு செய்வதிலும் நிருவகித்தலிலும் 5 வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தால் வழங்கப்படும் மனையியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் நிருவாகத்தில் 5 வருடத்துக் குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; மேலும் மனையியல் திட்டங்களைக் கற்பித்தல், ஒழுங்கு செய்தல், நிருவகித்தல் ஆகியவற்றில் 15 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ;

(ஈ) தனது கருமங்களைப் புரியும் மொழி மூலம் சி. பா. த./க. பொ. த. ப. பரீட்சையில் அல்லது உயர்ந்த பரீட்சையில் மொழியில் அல்லது இலக்கியத்திலான விருப்பத்திரங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**குறிப்பு.**—கல்வி ஆலோசகர் அந்தஸ்திலுள்ளவர்களும் மனையியல் கல்வி முயற்சிகளின் நிருவாகத்தில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் உட்பட மனையியல் கல்வி சம்பந்தமான கருமங்களில் மொத்தம் 15 வருட சேவை புரிந்தவர்களுமான உத்தியோகத்தர்களும் இப்பதவிக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராவர்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. : ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம் ;

(ஊ) அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; இந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ௵ ஒக்டோபர் ௴ 2 ந் வ.

10–439—9.10.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,875

---

## பொருட் கொள்வனவுப் பகுதி

### டிப்போ அதிகாரிகள் பதவிகள்

பொருட் கொள்வனவுப் பகுதியிலுள்ள மேலே கூறப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரிப் பத்திரத்தை நிரப்பி அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப் பத்திரங்கள் பதவிப்பெயரில் பொருட் கொள்வனவுக் கமிஷனர், 4 ஆம் மாடி, மில்லெனர் கட்டடம் கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். இவ் விண்ணப்பப் பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ம் திகதிக்குப் பிந்தாமல் பொருட் கொள்வனவுக் கமிஷனருக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

2. **தேவையான யோக்கியதாம்சங்கள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—

(அ) 1969 ம் ஆண்டு ஒக்ரோபர் 27 ம் திகதியில் அவர்கள் 40 வயதிற்குக் கூடாமல் இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வரும் ஒன்று அல்லது பல யோக்கியதாம்சங்கள் உள்ளதாயிருத்தல் வேண்டும் ; கனிஷ்ட பாடசாலை தராதரப்பத்திரம் அல்லது உயர்தரப் பரீட்சை, அல்லது—

(i) இரப்பரைத் தரம்பிரிக்கும் அறிவுடன் இலங்கையின் ஏற்றுமதிச் சரக்குகள் தரம் பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் 10 வருட அனுபவம் இருக்கவேண்டும். அல்லது.

(ii) இரப்பரை மட்டும் தரம்பிரிப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் அல்லது தரம் பிரிப்பதிலும் மட்டும் 10 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

(iii) சிறந்த தார்மீக ஒழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவாயிருக்கவேண்டும்.

3. **சம்பள விகிதம்.**—வருடமொன்றிற்கு 1,620 ரூபா தொடக்கம் 3,060 ரூபா வரை 12 வருடங்களுக்கு வருடமொன்றிற்கு 120 ரூபாவாக சம்பள உயர்வு கொடுக்கப்படும்.

4. **சேவை நிபந்தனைகள்.**—பதவிகள் தற்காலிகமானவை. பென்சன் இல்லை :—

(i) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை அமுலாக்குவதற்கு, குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஷரத்துக்களை அமுல் நடத்துவதற்கு ஏற்கனவே இருந்துவரும் சட்டதிட்டங்களுக்கு அல்லது இனிமேல் செய்யப்படும் சட்டங்களுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

(ii) அவர்களுடைய நியமனங்கள் முன்கூட்டியே நிறுத்தப்பட்டாலன்றி மூன்று வருட காலத்திற்கு மேற்பட்ட உத்தியோகம் குறிப்பிட்ட தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தி எய்துவதைப் பொறுத்திருக்கும். சிங்கள தேர்வுப் பரீட்சையில் சித்தி எய்துவது தெரிந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் 3 வருடங்களுக்குமேல் சேவையில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படுவாரென்று கருதப்படமாட்டாது.

(iii) நிரந்தரக் காரியதரிசி தீர்மானிக்கும் தொகையையே பாது காப்புப் பணமாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் நாட்டில் எந்தப் பாகத் திலும் சேவைசெய்ய தயாராக இருக்கவேண்டும்.

5. விண்ணப்பகாரர் விண்ணப்பப் பத்திரங்களோடு மூலக் கொப்பிகளை இணைக்காது நகல் கொப்பிகளையே இணைக்கவேண்டும் :—

(அ) பிறப்புப் பத்திரம்(ஞானஸ்னுன சான்றிதழ்களோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க வழங் கப்பட்ட பிறப்புச் சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்தரக் கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) இரப்பர் உற்பத்தியில் அல்லது தரம் பிரிப்பதில் அல்லது மூன்றி லும் உள்ள அனுபவம் சம்பந்தமான பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பகாரர்களின் யோக்கியதாம்சங்கள் ஒழுக்கம், பதவிக்கு நியமனம் செய்வதற்கான தகைமை ஆகியவற்றைக் காட்டும் மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள். இவ் நற்சாட்சிப் பத்திரங்கள் அண்மையில் பெற்றதாக இருக்கவேண்டும். (அரசாங்க சேவை யில் ஏற்கனவே இருப்பவர்கள் அத்தகைய நற்சாட்சிப் பத்திரங் கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை).

6. இந்த அரசாங்க வர்த்தமானி முதற் பகுதி, இரண்டாம் பிரிவில் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு உள்ள நியமனத்திற்கு ஏற்ற பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

பீ. காசிலிங்கம்,
பொருட் கொள்வனவுக் கமிஷனர்.

தபால் பெட்டி 147, கொழும்பு,
1969 ம் ஆண்டு செப்டம்பர் மீ 30 ந உ.

### டிப்போ அதிகாரிப் பதவிக்குரிய மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப்பெயர் (தனித்தனி எழுத்தில்) : ————.
   (அ) முதற் பெயர் : ————.
   (ஆ) மற்றும் பெயர்கள் : ————.
2. தபால் விலாசம் : ————.
3. (அ) இனம் : ————.
   (ஆ) இலங்கைப் பிரசையா அல்லவா : ————.
   (i) வம்சாவளியால் : ————.
   (ii) பதிவு செய்வதால் : ————.
4. (அ) பிறந்த திகதியும் 27.10.69 ல் உள்ள வயதும்(பிறப்புப் பத்திரக் கொப்பி இணைத்தல் வேண்டும்) : ————.
   (ஆ) கல்யாணமானவரா அல்லாதவரா : ————.
5. சித்திபெற்ற கல்வி உயர்தர பரீட்சைகளும் சித்திபெற்ற பாடங்களும் (திகதிகளுடன்) : ————.
6. எங்கே கல்வி பயின்றது ? பள்ளிக்கூடத்திலிருந்து விலகிய திகதி : ————.
7. அறிக்கையில் 2 (ஆ) (i) அல்லது (ii) குறிப்பிட்டிருக்கும் விஷயங் களில் உள்ள அனுபவம் : (இந்த அனுபவம் சம்பந்தமான நகல் கொப்பி நற்சாட்சிப் பத்திரங்கள் இணைக்க வேண்டும்) : ————.
8. சிங்களம் வாசிப்பதில், எழுதுவதில், விவாதிப்பதிலும் உள்ள திறமை : ————.
9. பள்ளிக்கூடம் விட்டபின் செய்த உத்தியோகங்களும் அவற்றின் திகதிகளும் முழு விபரங்களும் : ————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்தவர்கள் பெயர்களும் விலாசங் களும் (மூலக் கொப்பிகளை இணைக்காது நகல் கொப்பிகளே இணைக்கவேண்டும்) : ————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையுமென இத்தால் நான் உறுதியளிக் கிறேன். மேலே கூறப்பட்டிருக்கும் விபரங்களில் ஏதாவது பொய்யானல் அல்லது சரியானதல்லாவாயிருந்தால் அதை நியமனத்திற்குமுன் கண்டு பிடித்தால் நான் தகுதியற்றவரென்றும் நியமனத்திற்குப் பின் கண்டு பிடித்தால் நான் வேலையிலிருந்து நஷ்டஈடொன்றுமின்றி நீக்கப்படுவே னென்றும் எனக்குத் தெரியும்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

10–433—9.10.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,874

## உள்ளூராட்சி அமைச்சின் நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூராட்சி வேலைகள் பகுதியில் தொழில் பயில் படவரைஞர் பதவிகள்

உள்ளூராட்சி அமைச்சின், நீர்வழங்கல், வடிகால் அமைப்பு, உள்ளூ ராட்சி வேலைகள் பகுதியில் தொழில் பயில் படவரைஞர்கள் பதவி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் இவ்வலுவலகத்தால் வழங்கப்படமாட்டாது. ஆனல் எல்லா விண்ணப்பங் களும் கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப்படிவத்தில் 28.10.69 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

1. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 960—72—ரூபா 1,104

**குறிப்பு.**—பந்திகள் 3 (2) (அ) 3, (2) (ஆ) ல் காட்டப்பட்ட தகைமைகளை உடைய ஊழியர்கள் குறிப்பிடப்பட்ட வருடாந்தத் தொடக்கச் சம்பள அளவுத் திட்டமான ரூபா 1,032 க்கும் ரூபா 1,104 க்கும் தகுதி உடையவராவர்.

2. **வயதெல்லை.**—விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வியும் ஏனைய தகைமைகளும்.**—

(1) தூயகணிதத்தை ஒரு பாடமாகக் கொண்ட சிரேட்ட தராதரப் பரீட்சை நற்சான்றிதழை உடையவராகவும் ;

அல்லது

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (சாதாரணம்) சிங்களம்/ தமிழ் பாஷைகளுடன், தூயகணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைமையை இரண டிற்கு மேற்படாத இருக்கைகளில் தோன்றிப் பெற்றிருப்பதுடன் பின்வரும் தகைமைகளில் ஒன்றை உடையவராகவும் இருத்தல் வேண்டும்—

(2) (அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் (படவரைஞர் பயிற்சி நெறியை) ஒரு வருட முழு நேரத்தில் பூர்த்தி செய்தவராகவும்,

அல்லது

(ஆ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் கனிஷ்ட தொழி நுட்ப அலுவலாளர்களுக்கான (இரு வருட) பயிற்சி நெறி யைப் பூர்த்தி செய்தவராகவும்,

அல்லது

(இ) கட்டிட அமைப்பில் 1, 2, 3 ம் பயிற்சி நெறியை மாலை நேரத்திலோ அல்லது முழு நேரமல்லாத நேரத்திலோ பூர்த்தி செய்தவராகவும் இருக்க வேண்டும்.

4. **ஆள் சேர்க்கும் முறை.**—தகுதி பெற்ற விண்ணப்பகாரர்கள் இந்நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட தெரிவுச் சபையால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

5. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவன வற்றின் பிரதிகளை (உண்மைப் பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு :** ஞானஸ்ஞானச் சான்றிதழோ அல்லது பாடசாலைக்கான பிரமாணச் சட்டக் கோவைக்கென வழங்கப்பட்ட சான்றுப் பத்திரங்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா) ;

